1995 ஏப்ரல் 19]

தகுதிக்கு ஏற்றவாறு அவர்களுக்கு தங்குவதற்கு விருந்தினர் மாளிகை அளிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற, புதுப்புது திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், பரமக்குடி நகரம் மாவட்டத்தின் மத்தியில் அமைந்திருப்பதாலும், தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் அமைந்திருப்பதாலும், பல்வேறு அதிகாரிகள் அங்கே வருகிறபோது — அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித் துறையினுடைய விருந்தினர் இல்லங்கள் கொடுக்கப்பட்டு விடுவதால் — அதிகாரிகள் மிகவும் அல்லல்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இன்றையதினம் புதுப்புது திட்டங்களை வகுத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் புதுத் திட்டமாக, கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் அருகாமையில், அதிகாரிகள் தங்குவதற்காக தங்கும் விடுதிகள் — விருந்தினர் இல்லங்கள் — அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லாமல் இருந்தால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும். விருந்தினர் மாளிகைகள் கட்டியிருக்கிறபோது, அது பொதுப்பணித்துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, அது எல்லோருக்கும், எல்லா அதிகாரிகளுக்கும் சொந்தம். அவை இந்தந்தத் துறைகளுக்கு என்று அல்ல. எனவே, பரமக்குடியில் விருந்தினர் மாளிகை இல்லை என்றால், அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 343, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

343—

மனநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்

***21483—**திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது மனநோய் மருத்துவமனைகளில் நோயாளிகளை அனுமதிக்கப்படுவதில் சில வரைமுறைகளை வைத்திருப்பதைத் தவிர்த்து சிகிச்சை பெற விரும்புபவர்களுக்கு எல்லாம் சிகிச்சை அளிக்கப்படுமா?

(ஆ) காவல் துறையினர், சில குறிப்பிட்ட மனநோயாளியால் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்று கருதி, மனநோயாளர் சட்டத்தின் கீழ் (Lunatic Act) வழக்கு பதிவு செய்து கோர்ட் மூலம் அனுப்பப்படுகிற மனநோயாளிகளை மட்டும்தான் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை. எல்லா மன நோயாளிகளுக்கும் மற்ற பொது மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிப்பது போல் மனநோய் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முற்பகல் 10.05

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நோயாளிகளுக்கும் மருத்துவம் அளிப்பது என்பது வேறு. ஆனால் இந்த மன நோயாளிகளுக்கு மருத்துவம் அளிப்பது என்பது வேறு இப்போது உடனடியாக அந்த மன நோயாளிகளை ஒரு முறையோ அல்லது இரு முறையோ டிரீட்மெண்ட் செய்வதன் மூலமாக அவர்களுக்கு மன நோய் தீர்ந்து விடுவதில்லை. அப்படிப்பட்ட நோயாளிகளை வீட்டிலே கொண்டுபோய் வைத்திருப்பதோடு அவர்களுக்கு பாதுகாப்பிற்கு ஒருவரையோ அல்லது இருவரையோ நியமிக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வீட்டிலே அவர்களை வைத்துக்கொண்டிருப்பது, சமுதாயத்திலே அப்படிப்பட்ட நோயாளிகளை வீட்டிலே வைத்துக் கொண்டிருப்பது, சங்கடமான ஒரு சூழ்நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த நோயாளிகளை தெருவிலே விட்டுவிடுகிற நிலைமையைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பொதுமக்கள் கல்லை எடுத்து அடிப்பது போன்ற நிலைமைகளினால் காவல்துறையும் இந்த மாதிரி டேஞ்ஜரஸ் மன நோயாளிகளைத்தான் அவர்கள் வழக்கு பதிவு செய்து அரசு மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். எல்லா மன நோயாளிகளையும் கொண்டுபோன உடனே அவர்கள் அனுமதிப்பதில்லை. எனவே இதை ஒரு சமூகப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, மன நோயாளிகள் யாரை வேண்டுமானாலும் கொண்டுபோய் டிரீட்மென்டிற்கு அட்மிட் பண்ணும்போது மருத்துவமனையில் அனுமதித்து, அவர்கள் விரும்புகிற வரை அந்த மருத்துவமனையிலேயே அவர்களுக்கு மருத்துவ வசதி செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட வேண்டிய அளவிற்கு மன நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். யாராவது அவர்களை அழைத்து வரவேண்டும். அவர்களுடைய குடும்பத்திலே இருக்கக் கூடியவர்களோ, அல்லது உறவினர்களோ யாராவது அந்த மன நோயாளியை அழைத்து வந்தால் எந்தத் தடையும் இல்லாமல் உள் நோயாளியாக சேர்த்துக் கொள்கிறார்கள். ஒருவேளை அவர்களுக்கு அப்படி உறவினர்களோ, வேண்டப்பட்டவர்களோ இல்லாமல் வீதிகளிலே திரிகின்றவர்களாக இருந்தால் நீதிமன்றத்தின் மூலமாகவோ அல்லது காவல்துறையின் மூலமாகவோ அழைத்து வரப்படுகின்றபோது அவர்களையும், தேவைப்பட்டால், அவசியம் இருந்தால் உள் நோயாளிகளாக சேர்த்துக்கொள்கிறார்கள். குடும்பத்திலே இருப்பவர்கள் விரும்பினால் புற நோயாளிகளாக வைத்து இப்போது டிரீட்மென்ட் கொடுக்கப்படுகிறது. எனவே அந்த வகையிலேதான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே காவல்துறை மூலமாகவோ, நீதிமன்றத்தின் மூலமாகவோ வந்தால், உள் நோயாளிகளாக இப்போது அனுமதிக்கப்பட்டு வருகிறது.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய முறை முழுமையாக பின்பற்றப்படாத காரணத்தால்தானோ, என்னவோ தற்போது கூட தெருக்களிலே இந்த மன நோயாளிகள் உலாவி வருவதைப் பார்க்கிறோம். எனவே இதற்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடித்து இப்படிப்பட்ட மன நோயாளிகளை மருத்துவமனையிலே அனுமதித்து, அவர்கள் முழு சிகிச்சை பெறுகின்ற வரையில், அவர்களை டிஸ்சார்ஜ் செய்யாமல் அங்கேயே வைத்து பாதுகாக்கப்படுவார்களா? சில ஏழை எளியவர்கள் வந்து கீழ்பாக்கம் மருத்துவமனையில் கொண்டுவந்து விடுகிறார்கள். அவர்கள் சற்று குணமடைந்த உடனே அந்தப் பெற்றோருக்குக் கடிதம் வருகிறது, வந்து அழைத்துக்கொண்டு போய்விடுங்கள் என்று சொல்லி. திரும்ப அழைத்துக்கொண்டு போய் அந்த டிரீட்மெண்டை தொடராத சூழ்நிலையில் மீண்டும் அந்த மன நோய் வந்துவிடுகிறது. அதற்குப் பிறகு இப்படி தொடர்ந்து சில ஏழைகளால் அவர்களைப் பராமரிக்க முடியாத சூழ்நிலை எல்லாம் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பெற்றோர்கள் விரும்பவில்லை என்று சொன்னால், அந்த மன நோயாளிகளை அங்கேயே, அந்த மருத்துவமனையிலேயே வைத்துக் கொள்வதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயாளியாக இருக்கிற வரையில்தான் மருத்துவமனையில் வைத்துக் கொள்ளமுடியும். அதற்குப் பிறகு அவர்கள் குணமடைந்த பிறகு, மருத்துவமனையிலே அவர்களை வைத்துக்கொள்வது இயலாத காரியம். இப்போதுகூட பல நோயாளிகள் நார்மலான சூழ்நிலைக்கு வந்த பின்னாலே,

அவர்கள் வெளியிலே போகவேண்டுமென்று கருதுகிறார்கள், கேட்கிறார்கள். அதோடு, பெற்றோர்களுக்கோ, மற்றவர்களுக்கோ, உறவினர்களுக்கோ தெரிவிக்கவேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். சில நேரங்களில் அப்படி தெரிவிக்கப்பட்டால்கூட அவர்கள் வராமலேகூட போய்விடுகிறார்கள் அல்லது சேர்க்கிறபோதே தவறான விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் இப்போதே அந்த மருத்துவமனை சந்தித்துக் கொண்டிருக்கிறது. பல நேரங்களிலே கொண்டுவந்து சேர்க்கிறபோது ஒரு விலாசத்தைக் கொடுக்கிறார்கள். அதற்குப் பின்னாலே தேடிப் போனாலும், ஆளை அனுப்பினாலும், கடிதம் போட்டாலும் அங்கேயிருந்து எந்த ரெஸ்பான்சும் இருப்பதில்லை. அப்படிப்பட்ட நோயாளிகள்கூட அந்த மருத்துவமனையில் இப்போது இருந்துகொண்டிருக்கிறார்கள். ஓரளவிற்கு நிலைமை சீரடைந்துவிட்டால் அவர்கள் அந்த மருத்துவச் சிகிச்சை பெற்று, குணமாகிவிட்டால், அதற்குப் பின்னால் பெற்றோர்களோ அல்லது உறவினர்களோ கொண்டுபோய் பராமரிப்பதுதான் சிறப்பாக இருக்கும். தொடர்ந்து நாமே வைத்துக்கொண்டிருப்பது அவ்வளவு சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இது எல்லாம் வேண்டாம். மனநோயாளிகளைப் பற்றிக் கேளுங்கள். ** என்றெல்லாம் வேண்டாம். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சி. இராமசுவாமி: ** என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் யாரைக் குறிப்பிடுகிறார், எப்படிக் குறிப்பிடுகிறார் என்று தெரியாது உங்களுக்கும். பதில் வேண்டாம். உட்காருங்கள். திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, அதற்கு பதில் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். இது அதை விட மோசமாக இருக்கிறது. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநோயாளி யார் என்பது நாட்டுக்கு தெரியும். அதேநேரத்தில் மன நோயாளி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 19]

என்றவுடன் அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போய் எப்ஐ.ஆர். போட்டு கோர்ட்டிலே புரொட்டியூஸ் செய்து அதன் பிறகு கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கோ மற்ற ஆஸ்பத்திரிக்கோ அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஒருவர் மன நோயாளி என்றவுடன் பார்த்த உடனே நமக்கெல்லாம் தெரிகிறது. நன்றாகவே அவர் மன நோயாளிதான் என்று நமக்கே தெரிகிறது. அப்படி தெரிந்ததற்குப் பிறகு போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டிய நிலை, எப்ஐ.ஆர். போட வேண்டிய நிலை. அவரை நேரடியாக டாக்டருக்கு அனுப்பி, ஹாஸ்பிடலில் அட்மிஷன் கொடுத்து டிரீட்மென்ட் செய்து அவரைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் மனநோயாளி என்று தெரிந்தாலும் கூட அவரை மருத்துவ மனைக்கு அழைத்து வரக்கூடியவர்கள் யாராவது ஒருவர் அவரை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். காரணம், அதற்குப்பின்னாலே அவர் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கொடுப்பதற்கோ அல்லது வேறு எதற்கோ அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவேதான் பெற்றோர்களோ உறவினர்களோ யாராவது வரவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுகிறது. இன்னொன்று அவருக்கு யாரும் உறவினர்கள் இல்லை என்ற நிலை வருகிறபொழுது காவல்துறை அதிகாரிகளிடத்திலே போய் எப்.ஐ.ஆர். போடப்பட்டால்தான் பின்னாலே அவர் ஏதாவது தவறு செய்தவர்களாக இருக்கலாம், வேறு ஏதாவது குற்றத்தைச் செய்துவிட்டு வந்தவர்களாக இருக்கலாம். இப்படிப்பட்ட தன்மைகள் இருக்கின்றன என்ற காரணத்தினால்தான் அனாதைகள் என்று சொல்லக்கூடியவர்கள் அல்லது அவர்களுக்கு யாரும் இல்லை என்ற நிலையிலே காவல் நிலையத்திலே போய் எப்.ஐ.ஆர். போட்டு வந்தால்தான் சரியாக இருக்கும். பின்னாலே வருகிற பிரச்சினைகளுக்கு ஒரு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு சுலபமாக இருக்கும் என்ற காரணத்தினால்தான் இந்த முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மருத்துவர்கள் ஒரு மனநோயாளிக்கு சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எத்தனை மருத்துவர்கள் சர்டிபிகேட் கொடுத்தாலும் கூட, இங்கே வந்து இந்த மருத்துவமனையில் பரிசீலிக்கிறபொழுது இது உண்மை என்று கண்டறியப்படுகிறபொழுதுதான் சேர்க்கப்படுகிறது. எனவே அதற்கான வழி முறைகள் இருக்கின்றன. அதற்காக பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

[1995 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைகளாக இருக்கும் மனநோயாளிகள் தெருவிலே ஆடை இல்லாமல் திரிவது அந்த நேரத்தில் பார்ப்பவர்களுக்கும் ஒரு அறுவறுப்பாக இருக்கிறது. எனவே அரசே அவர்களை பிடித்துச் சென்று அவர்களை ஒரு இல்லம் மூலமாக வைத்து அவர்களுக்கு போதிய சிகிச்சை அளிக்கவேண்டும் என்று கோருகிறேன். அத்தோடு அந்த சிகிச்சைக்கு அவர்கள் தெளியவில்லை என்றால் ஒரு கருணை கொலை என்று சொல்வார்களே அந்த வகையில் கருணை கொலை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக அவர் சொன்னது நிச்சயமாக அரசு செய்வதற்கு தயாராக இல்லை. இதுபோன்ற நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை. ஆனால் அதேநேரத்தில் தெருவிலே அனாதையாக இருக்கக் கூடிய நோயாளிகள் பிடிக்கப்பட்டு இப்போது மருத்துவ மனைகளுக்கு கொண்டு வரப்படுகிறார்கள். மருத்துவமனையிலும் இந்த வேலை செய்யப்படுவது இல்லை. ஆனால் எங்கே இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கிறதோ அவர்கள் உடனடியாக காவல் துறையினரால் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். கடந்த காலத்தில் இருந்ததை விட நீங்கள் இப்பொழுது பார்த்தால் அப்படிப்பட்டவர்கள் தொந்தரவு கொடுக்கிற வகையிலே அவர்கள் வீதியிலே திரிவது என்ற நிலைமையைப் பார்க்க முடியாது. எனவே அவர்களை அழைத்து வந்து மருத்துவமனையிலே எவ்வளவு நாட்கள் சிகிச்சை தேவைப்படுகிறதோ அவ்வளவு நாட்கள் வைத்திருக்கிறார்கள். பலர் அந்த மருத்துவமனையிலேயே வயது ஆகி இறந்து விடுகிற சூழ்நிலைமையும் கூட ஏற்படுகிறது. பலபேர் நன்றாக குணம் ஆன பிறகும் கூட அங்கேயே வைத்திருக்கக் கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் அனேகமாக இந்தியாவிலேயே நம்முடைய இந்த மெண்டல் ஆஸ்பத்திரி தான் மிகச் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிற அளவுக்கு மிகச் சிறப்பாக பராமரித்து வருகிறார்கள். சமீபத்திலே நான் அங்கே போயிருந்தபோது அங்கே இருக்கிற நோயாளிகளே எல்லா பணிகளையும் எடுத்து செய்வதற்கு முன்வந்து மருத்துவர்களோடு இருப்பதையெல்லாம் என்னால் பார்க்க முடிந்தது. எனவே, அந்த அளவுக்கு அது சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, எவ்வளவு நாள் அவர்கள் உயிரோடு இருந்தாலும் அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. வேறுவிதமான நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசாங்கம் எடுக்காது.

1995 ஏப்ரல் 19]

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் தொழுநோயாளிகளுக்கென சிகிச்சை அளித்து, அதற்கு சிகிச்சை முடிந்த பின்னர் அவர்களுக்கு காப்பகம் அமைத்து ரீஹேபிளிடேஷன் முறையில் அவர்களுக்கென்று தொழில் வழங்கி அவர்களை காத்துக் கொண்டிருப்பது போல் இந்த மன நோயாளிகளுக்கும் அவர்கள் இந்த சமுதாயத்திலே வந்தால் திருப்பி மறுவாழ்வு அடைய முடியாது என்கின்ற அடிப்படையில் இந்த அரசாங்கமே அவர்களுக்கு ஒரு காப்பகம் அமைத்து ரீஹேபிளிடேஷன் முறையில் தொழில் செய்வதன் மூலமாக ஒரு வாழ்வளிப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, மனநோயாளிகளாக வருகிறார்கள். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சை அளிக்கப்பட்டு ஓரளவிற்கு தெளிவு பெற்றவர்கள் அவர்களுடைய பெற்றோர்களுடனோ, அல்லது உறவினர்களுடனோ போகிறார்கள். அதற்குப் பின்னாலே அவர்கள் யாராவது ஒருவருடைய பாதுகாப்பிலே இருப்பது தான் சரியாக இருக்குமேயொழிய, தனியாக அவர்களுக்கு தொழிலைத் துவங்கிக் கொடுப்பதென்பது அவ்வளவு வெற்றிகரமாக இருக்குமா என்று நம்மால் கருதமுடியாது. எனவே, அப்படிப்பட்ட நிலைக்கு போகாமல் அந்த சிகிச்சை கொடுப்பதற்கு பொறுப்பு நாம் ஏற்கலாம். அதற்குப் பின்னாலே தொடர்ந்து அவர்களை கண்காணிப்பதற்கு வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அந்தக் குடும்பம் ஏற்றுக்கொள்வது நல்லது. ஒருவருமே இல்லாத அநாதைகளாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 344, திருமதி வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

344—

காரியாப்பட்டி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***35690—**திருமதி வி. ஜி. மணிமேகலை:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியத்தில் உள்ள மறைக்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?